بسم الله الرحمن الرحيم

# FRIDAY SERMON / வெள்ளிக்கிழமை குத்து∴பா 29/01/2016

**(18 RABIUL AAKHIR 1437 HIJRI)**

## “THE ADVENT OF PROPHETS TO SAVE THE MUHAMMADAN UMMAH” (PBUH)/

## “முஹமது (ஸல்) வின் உம்மத்தை இரட்சிப்பதற்கு நபிமார்களின் வருகை”



**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

உலக மக்களுக்கு சலாம் தெரியப்படுத்திய பிறகு தஷஹ்ஹுதும் தஅவுதும் சூர அல்∴பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கீழ் காணுமாறு உரையாற்றினார்.

புதிய ‘‘சரியத்’’ இல்லாமல் ஹஸ்ரத் முஹமது (ஸல்) வின் உம்மத்தில் இறைத்தூதர்கள் தோன்றுவதற்கு முக்கியமான காரணம் இஸ்லாம் முழு உலகத்திற்குமாக உருவாக்கப்பட்ட மார்க்கம் என்பதினாலாகும். அந்த தீனுல்இஸ்லாமை முழு உலகத்திற்கும் எட்ட வைக்க வேண்டியது கட்டாயமான விஷயமாகும். இந்த முக்கியமான விஷயத்தை நிறைவேற்றிக்கொள்ள இரண்டு வகைப்பட்ட கையாளுதல் மிக அவசியமாகும்.

(1) முஸ்லீம்களின் ஆன்மீக சீரமைப்பு

(2) உலகம் முழுவதும் இஸ்லாமை பரவச்செய்தல்.

இந்த இரண்டு விஷயங்களும் மிக நல்லமுறையிலான ஒழுக்கம் கூடாமல் அடையமுடியாது. அதற்கு ஒரு தலைவர், ஒரு இமாம் அவசியமாகும். இந்த ஒழுக்கத்தைக்குறித்து அல்லாஹ் அவனது திருமறை மூலமாக கூறுவதைப் பாருங்கள்.

**“தீயவர்களை நல்லவர்களை விட்டும் பிரித்தறிவிக்கும் வரையில் மு.ஃமீன்களை நீங்கள் இருக்கும் நிலையில் அல்லாஹ் விட்டுவைக்கமாட்டான். இன்னும் அல்லாஹ் உங்களுக்கு மறைவானவற்றை அறிவித்து வைப்பவனாகவும் இல்லை. ஏனெனில் அல்லாஹ் தான் நாடியவரைத் தன் தூதர்களிலிருந்து தேர்ந்தெடுக்கின்றான். ஆகவே அல்லாஹ்வின் மீதும் அவன் தூதர்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். நீங்கள் நம்பிக்கைகொண்டு பயபக்தியுடன் நடப்பீர்களாயின் உங்களுக்கு மகத்தான நற்கூலியுண்டு”** (3-180)

இங்கு நம்பிக்கையாளர்களிடம் கூறியிருப்பது. ஏய், நம்பிகையாளர்கள் என்று உரிமைகோருகின்றோர்களே நல்லதிற்கும் தீயதிற்கும் ஒன்றுக்கொன்று எவ்வித வித்தியாசவும் இல்லாதவரையில் நீங்கள் இதற்கு இரண்டிற்கும் மத்தியிலாகயிருப்பீர்கள். அதன் பலனாக இஸ்லாமின் ஆற்றல் இழக்கும். இவ்வகையிலான ஒரு சூழ்நிலையினை அல்லாஹ் விரும்பவில்லை. அதனால் நல்லதையும் தீயதையும் பிரித்துக்கொள்வதற்கு நிச்சயமாக அல்லாஹ் ஒரு நபியினை தோற்றுவிப்பான். எவர் நல்லவர் எவர் தீயவர் என்பதை குறித்து நன்கு அறிந்தவன் அல்லாஹ்மட்டுமாவான். எவ்வாறு இவர்களை பிரித்துக்கொள்ள வேண்டும் என்பதும் நன்கு அல்லாஹ் அறிவான். அப்பிரிவினை ஏற்படுத்திக் கொள்வதற்கு நற்குணமுடையவராகிய ஒரு முஸ்லீமை அவன் தேர்ந்தெடுக்கின்றான். ஆகவே ஏய் நம்பிக்கையாளர்களே நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனது தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மாறாக ஒரு நபி தோன்றமாட்டார் என்றால் நன்மைக்கும் தீமைக்கும் எவ்வித வித்தியாசம் இல்லாத ஒரு நேரம் வந்தடையும் என்றும் அந்நேரம் ஒரு நபியை அவன் தோற்றுவிப்பான் என்றும் ஹஸ்ரத் முஹமது (ஸல்) வில் நம்பிக்கை கொள்ளும் மக்களிடம் எதற்காக அல்லாஹ் கூறினான்? அந்த நபியில் நம்பிக்கை கொள்ளுவதற்கான கட்டளை எதற்காக அல்லாஹ் விடுத்தான்? இது நாம் அஞ்சிக்கொள்ள வேண்டிய வஷயமாகும். சிந்திக்கின்ற மக்களுக்கு இதில் விஷயம் இருக்கின்றன.

இந்த நூற்றாண்டில் இப்பூமியில் கோடிக்கணக்கான முஸ்லீம்கள் உண்டு. அவர்களுக்கு அரசாங்கங்களும் இருக்கின்றது. செல்வங்களும் உண்டு, பண்டிதர்கள் உண்டு இவை எல்லாம் இருந்தாலும் இஸ்லாமின் வடிவிற்கு வனப்பூட்டுவதற்கோ அதைபரவசெய்வதற்கோ உண்மையில் அவர்கள் ஒன்றும் செய்வதில்லை. வீண் பெருமை காட்டிக்கொள்ளும் மற்ற அரசாங்கங்களுடன் நான் எதுவும் கூறவில்லை. உண்மையில் இஸ்லாம் என்றால் என்ன என்பதை குறித்து பதில் அளிப்பதற்கோ, உண்மையில் இஸ்லாம் எதற்காக நிலைக்கொள்ளுகின்றது என்பதை பற்றி விளக்குவதற்கோ நான் முற்படவில்லை. மாறாக நான் கூறிக்கொள்வது, நாள்கள் கடந்துசெல்ல செல்ல இஸ்லாம் அதன் ஆற்றலை இழந்து வருகின்றது. இஸ்லாமின் உண்மையான போதனைகள் எட்டி மிதிக்கபடுகின்றது. முஸ்லீம்கள் என உரிமை கோருகின்றோர்கள் அனுதினம் இஸ்லாமின் பெயரில் காட்டிக்கொள்ளும் ஆசாரங்கள் காரணம் இஸ்லாமிற்கு தீயபெயர் கிடைத்ததுமட்டுமின்றி தீவிரவாதத்தை பிரச்சாரம் செய்யும் மதம் என இஸ்லாமின் மீதும் குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது. முஸ்லீம்கள் என்று சுயம் கூறிக்கொள்ளும் இவர்கள் இஸ்லாமின் கட்டளைகளை தூக்கி

வீசிவிட்டார்கள். மற்ற மதங்களுக்கு முன்னால் முழுமைப்பெற்ற மதமான இஸ்லாமின் பெயர் மிக மோசமாக பரிணமித்துவிட்டது.

ஒரு விஷயம் உறுதியாகும். அதாவது இஸ்லாமை பிரச்சாரம் செய்வதற்கு அரசாங்கத்தினுடையதோ செல்வத்தினுடையதோ எண்ணிக்கையுடையதோ ஒன்றும் தேவையில்லை. மாறாக, அதற்கு தேவையானது நற்குணமும் நம்பிக்கையுமாகும். ஜமா அத்துச்சஹிஹீல் இஸ்லாம் இந்த பாரம் வாய்ந்த பொறுப்பினை ஏற்றெடுத்திருக்கின்றது. எங்களுக்கு பின்னால் பெரிய எதிர்க்கட்சிகள் இருந்தாலும், ஜமாஅத்துச்சஹிஹீல் இஸ்லாம் நிரந்தரமான திட உற்சாசாகத்துடன் இஸ்லாமின் தூது செய்தியினை உலகெங்கும் பரவச்செய்கின்றார்கள். பொருளாதாரத் துறையில் ஜமாஅத்துச்சஹிஹீல் இஸ்லாம் இப்போது பின்தங்கியிருக்கின்றது. உறுப்பினர்களும் குறைவாகும். ஆனால் நாங்கள் உலகில் செய்துவரும் வேலைகளுக்கு தடங்கல் ஏற்படுத்திட எங்கள் பகைவர்களுக்கு முடிவதில்லை. ஏனெனில் ஜமா அத்துச்சஹிஹீல் இஸ்லாமிற்கு இறைவன் தேர்ந்தெடுத்த, இறைவனின் ஒரு கலீஃ.பா இருக்கின்றார். அவர் இந்நூற்றாண்டின் இமாமாக திகழ்கின்றார் என்பதாகும்.

ஜமா அத்துச்சஹிஹீல் இஸ்லாமின் உறுப்பினர்களின் இதயங்கள் நம்பிக்கையாலும் நற்குணத்தினாலும் நிறைந்திருக்கின்றது. திரு குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்றவர் வாழ்க்கையை அமைத்திட அவர்கள் முயற்சிக்கின்றார்கள். அவர்களின் செல்வங்களையும் வாழ்கையையும் இஸ்லாமின் வளர்ச்சிக்காக தியாகம் செய்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்காக தேர்ந்தெடுத்த இறைத் தலைவரின் இனிய போதனைகளுக்கு ஏற்ற முறையில் அவர்கள் செயல்படுகிறார்கள். அவர்கள் முழுமை வாய்ந்த கட்டுப்பாட்டுடன் இருக்கின்றார்கள். தூய துதர் முஹமது (ஸல்) வின் கடமை உத்திரவாதத்தை ஏற்றெடுத்திருக்கும் ஜமாத்தாகும் இது என அவர்கள் திட நம்பிக்கை கொள்ளுகின்றார்கள். இந்த நூற்றாண்டில் கலீஃ.பத்துல்லாஹ்வை ஏற்றுக்கொண்டோர்கள் மீது அல்லாஹ் வின் அருள்கள் பொழிந்திருக்கின்றது என அவர்கள் நம்பிக்கைக் கொள்கின்றார்கள். இந்த பாக்கியசாலிகள் (கலீஃ.பத்துல்லாஹ்வின் தோழர்கள்) இதைவிட சக்திவாய்ந்த முறையில் செயலாற்றுவார்கள். இந்த உண்மையின்பால் ஏராளமான மக்கள் வருகைத் தருவார்கள். அலலாஹ் அவர்களுக்கு மார்க்கத்தரிசனம் வழங்கிக் கொள்வான். இஸ்லாமின் தூதுச்செய்தி பூமியிலெங்கும் பரவிவிடும். இறையருளால் அல்லாஹ்வின் கலீஃ.பாவை அவர்கள் அங்கீகரித்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் செய்திருக்கின்றார்கள். முஸ்லீம்கள் ஒரு முறைக்கூட அய்யமின்றி, தடங்கலின்றி ஏகனாகிய இறைவனை மட்டும் வணங்குவார்கள். இறைவாக்குறுதிக்கு ஏற்றவார் அனைத்து மக்களையும் இஸ்லாமின் பால் அழைத்துக்கொள்ளும் விஷயத்தில் அல்லாஹ்வின் கலீஃ.பா வெற்றியடைந்திடவே செய்வார். அல்லாஹ் அவனது கலீஃ.பாவைக் குறித்து இவ்வாறு கூறுகின்றான்

**“அல்லாஹ் உங்களில் நம்பிக்கைக் கொண்டு நற்செயலாற்றுபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃ.பாவாக ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃ.பாவாக ஆக்குவதாகவும் அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களின் அச்சத்திற்கு பிறகு அதற்கு பதிலாக அமைதியினை வழங்குவதாகவும், அவர்களிடம் வாக்குறுதி அளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள். எதனையும் இணையாக்க மாட்டார்கள் அதன் பின்னரும் நிராகரிப்போர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள்”** (24:56)

எனது முஸ்லீம் சகோதரர்களே சகோதரிகளே! பிரார்த்தனை செய்யுங்கள். ஜாக்கிரதையுடையவர்களாயிருங்கள். இஸ்லாம் இப்பொழுது ஆற்றல் இழந்த நிலையிலாகயிருக்கின்றது. நீங்களும் உங்களின் குழந்தைகளும் இஸ்லாமிலிருந்து வெகுதூரம் சென்று விட்டீர்கள். தூய தூதர் முஹமது (ஸல்) வின் தோழர்களின் இதயங்களில் ஒரு முறைக் காணப்பட்டிருந்த நம்பிக்கை, அந்த திடமான நம்பிக்கை இன்று எங்கு போய்விட்டது? நமக்கும் இப்பொழுது தேவை அதே நம்பிக்கையும் ஒற்றுமையும் ஆகும். ஒரு வார்த்தையினால், அல்லாஹ்வின் கலீ்ஃபாவின் ஒரு வார்த்தையினால் கூறிக்கொண்டால், அந்த இஸ்லாம் பூமியில் மறுபடியும் வந்தடைய வேண்டும். இன்று முஸ்லீம்கள் ஆற்றல் இழந்தவர்களாக காணப்படுகின்றார்கள். நாஸ்த்திகத்தினுடையவும் மத மாற்றத்தினுடையவும் சூறாவளிகள் அவர்களை முற்றிலும் துடைத்து நீக்கிக்கொள்ளுமென அவர்கள் அஞ்சுகின்றனர். அல்லாஹ் அவனது வாக்குறுதியினை இப்பொழுது நிறைவேற்றாமல் பின்னர் எப்பொழுது அதை நிறைவேற்றவேண்டும்? அல்லாஹ் அவனது வார்த்தயினை நிறைவேற்றிக் கொள்பவன் ஆவான். இந்த நூற்றாண்டில் ஒரு முஹைத்தீனை, ஆம் ஒரு கலீ்ஃபத்துல்லாஹ்வை அனுப்பிவைத்துக்கொண்டு அவன் உங்களுக்கு கொடுத்த வாக்குறதியினை நிறைவேற்றிக் கொண்டான். உலமாக்களை அவர்களின் “பித் அத்துமாக நீங்கள் விட்டுவிடுங்கள். நபிமார்கள் தோன்றும் வாசலை அவர்கள் அடைத்துக்கொண்டார்கள். இறைவெளிபாடுகளின் வாசலையும் அவர்கள் அடைத்துக்கொண்டார்கள். அவ்வாறு செய்தால் மட்டுமே பித்அத்துகளின் (காத்த் / தவ்ஈள் / மௌலித் போன்றவைகள்) வாசலை அவர்களுக்கு திறந்து வைத்துக்கொள்ள முடிவது. அவர்கள் மக்களை குர் ஆன் படித்துக்கொள்வதிலிருந்து விலக்கிக்கொண்டார்கள். அவர்கள்பிறகு மக்களை உலகமக்களின் ஈர்பு வலையத்தின் பால் வீழ்த்திக்கொண்டார்கள். இந்த தீய உலமாக்கள் இறைத்தூதனிடம் பகைமை வைத்திருப்பவர்கள் ஆவார்கள். நீங்கள் உங்களின் கண்களைத் திறந்துக்கொள்ள வேண்டும். தூய தூதர் முஹமது (ஸல்) அவர்கள் கூறியிருந்ததாக காணவில்லையா?

**“வானத்தின் கீழில் அவர்களின் உலமாக்கள் மிக கெட்ட ஜந்துக்களாகயிருப்பார்கள்”**

ஆகவே இஸ்லாமை பாரிலெங்கும் பிரச்சாரம் செய்வதற்கு, பிரிய தூத (ஸல்) வின் தூதுச் செய்தியை பூமியில் வெற்றிப்பெறச் செய்வதற்கு எங்களோடு வந்துச்சேருங்கள். எனது சகோதர சகோதரிகளே “நுபூவத்” என்றென்றும் நிலைநிற்பதாகும் அது தூய தூதர் முஹமது (ஸல்) வுமாக இணைந்திருப்பதாகும். அன்னாரின் பரிபூரணத்திலும் காத்தமியத்திலுமாகும் அதன் அழகு! தூய தூதர் முஹமது (ஸல்) வின் நம்பிக்கையாளராகிய தோழர்களிலிருந்து இறுதிநாள்வரையிலும் அல்லாஹ் நிச்சயமாக நபிமார்களை குறிப்பிட்ட காலங்களில் நியமித்துக்கொண்டிருப்பான். இதற்கு முற்றுப்புள்ளி வைத்திட எவராலும் முடியாது. அல்லாஹ்விலிருந்துள்ள ஒரு அருளாகுமிது. அவனது வாக்குறதியுமாகும். அவனது வாக்குறதியினை அவன் எப்போதும் நிறைவேற்றிக்கொள்வான். மார்க்கத்தை எப்பொழுதும் சீரமைப்பது அல்லாஹ் ஆவான். மனிதனை பௌதீகத்திலிருந்து மீட்பதற்கும், தன்னை படைத்தவனின் பால் திருப்பிக்கொள்வதற்குமாக அவன் ஒரு நபியினை தோற்றுவிக்கின்றான் அல்லது ஒரு சீர்திருத்தாளரை நியமிக்கின்றான். அவ்வகை சீர்திருத்தாளர்கள் மக்களிலிருந்து ஏராளமான தியாகங்கள் இறைவனின் பெயரில் தேவைப்படுகின்றார்கள். அன்னார்

மக்களை தியாகத்திற்காக அழைக்கின்றார். திடமான உற்சாகமுடையவராகவும் பெறுமையாளராகவும் வாழ தேவைப்படுகின்றார். வாழ்ந்துக்கொள்ள விரும்புகின்றோர்கள் உயிரை கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்க அவர் உபதேசிக்கின்றார். பார்வையற்ற எதிராளிகளுக்கு எதிராக ஆழமானதும் வேதனையுடையதுமான போராட்டத்திற்காக அன்னார் அவர்களை ஆயத்தமாக்கின்றார். துன்புறுத்தல்களை ஏற்றுக்கொள்வதற்கு அவர்களை முன்வரசெய்கின்றார்

உண்மையான இறைபாடங்களை சீரமைக்கின்ற நிரந்தரமான தத்துவமார்க்கம் இதுவேயாகும். இதற்கு எதிரான எல்லா தத்துவ வழிகளும் கற்பனை கதைகளாகும். நான் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன், ஒவ்வொரு முஸ்லீம்களும் அவர்கள் ஏது அமைப்பிலாகயிருந்தாலும் சரி அவர்கள் ஏகனாகிய அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளட்டும். தூய தூதர் முகமது (ஸல்) வின் நுபூவத்தின் மீதும் நம்பிக்கை கொள்ளட்டும். மனுகுலத்தின் இரட்சிப்பிற்காக தோன்றிய இறுதிமார்க்கமாகும் இஸ்லாம் என்றும், இறுதிநாள் வரையிலும் மனிதனின் ஆன்மீக தேவைகளுக்கு தீர்வுகிடைக்கும் மதமாகும் இஸ்லாம் என்றும் ஒவ்வொரு முஸ்லீம்களும் நம்பிக்கை கொள்கின்றனர். தூய தூதர் முஹமது (ஸல்) வுக்கு இறக்கப்பட்ட திரு குர்ஆனுக்கு எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை என்றும் அதில் ஒரு வள்ளிக்கோ புள்ளிக்கோ மாற்றம் வருவதில்லை என்றும் ஒவ்வொரு முஸ்லீம்களும் நம்பிக்கை கொள்கின்றனர். தூயத்தூதர் முஹமது (ஸல்) வின் போதனைகள் கடந்த காலங்களைப் போன்று பூமியில் கடைசி மனிதன் நிலைநிற்கும் காலம் வரையில் அது தகுதிவாய்ந்த பாடமாகவே திகழும் என்று மட்டுமின்றி தூய தூதர் முஹமது (ஸல்) மீதான பந்தம் வழியாக மட்டுமே நிரந்தரமான உண்மை ஒளியினை தரிசிக்க முடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றார்கள். இந்த அடிப்படையான தத்துவத்தை அனைத்து முஸ்லீம்களும் வேற்றுமையின்றி அங்கீகரிக்கின்றார்கள். ஏராளமான விஷயங்களில் வேற்றுமையின்றி நம்பிக்கை கொள்கின்றனர் என்றிருந்தாலும் அடிப்படையான ஒரு வித்தியாசம் மற்று முஸ்லீம்களிலிருந்து ஜமா அத்து ச்சஹிஹீல் இஸ்லாமை வேர்படுத்துகின்றது. அதென்னவென்றால் மற்று முஸ்லீம்கள் இறைவெளிப்பாடுகளுடைவும் இறைத்தூதர்களின் வருகையுடையவும் வாசலை அடைந்துக்கொண்டார்கள் என்பதாகும்.

**வாருங்கள்! ஏய் நல்லவர்களாகிய, நற்குணமுடைய, உண்மையாளர்களாகிய, இறைபடைப்புக்களே! இந்த ஒளிமயமான இலட்சியத்தை அடைவதற்கு உதவிக்கரங்களை நீட்டிக்கொள்ளுங்கள்! இறையருள்களின் உரிமையாளர்களாக மாறிடுங்கள்! அல்லாஹ் உங்களுக்கு அந்த மகிழ்சியை தந்து அருள் புரிவானாக.** ஆமீன்.

**Issued by**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web. www. jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**